**SEC 4 / O-LEVEL EXAM REVISION WORKSHEETS (PAPER 2) - LEVEL 2**
**உயர்நிலை 4 சாதாரண நிலை தேர்வுப் பயிற்சித்தாள் (தாள் 2) - நிலை 2**

# பொருளடக்கம்


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1 | தேர்வுத்தாள் 1 | 1 - 10 |
| 2 | தேர்வுத்தாள் 2 | 11 - 20 |
| 3 | தேர்வுத்தாள் 3 | 21 - 30 |
| 4 | தேர்வுத்தாள் 4 | 31 - 40 |
| 5 | தேர்வுத்தாள் 5 | 41 - 50 |
| 6 | தேர்வுத்தாள் 6 | 51 - 60 |
| 7 | தேர்வுத்தாள் 7 | 61 - 70 |
| 8 | தேர்வுத்தாள் 8 | 71 - 80 |
| 9 | தேர்வுத்தாள் 9 | 81 - 90 |
| 10 | தேர்வுத்தாள் 10 | 91 - 100 |
| 11 | தேர்வுத்தாள் 11 | 101 - 110 |
| 12 | தேர்வுத்தாள் 12 | 111 - 120 |
| 13 | அருஞ்சொற்கள் (தேர்வுத்தாள் 1 to 12) | 121 - 129 |
| 14 | விடைத்தாள் | 130 - 150 |


WORDSMITH BEYOND LEARNING
EQ SKILLS = JUMP grades + achieve Big

# தேர்வுத்தாள் 1

/70

**'அ' பிரிவு**

**A1 மரபுத்தொடர்களும், இணைமொழிகளும் (10 மதிப்பெண்கள்)**

**கீழ்க்காணும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கேற்ற சொற்றொடர்கள் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கேற்ற மிகப் பொருத்தமான சொற்றொடரைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

Q1 கணிதத் தேர்வில் வினாக்களைச் சரியாக வாசிக்காமல் ____________________ விடையெழுதிய மாலா மிகக் குறைவான மதிப்பெண்களே பெற்றாள்.

Q2 சீதா தன் வகுப்பு மாணவிகளிடம் நன்னெறி பாடத்தின்போது ____________________ நடந்துகொள்ளும் முறையையும் மரியாதைக்குரிய செயல்களையும் கற்பித்தாள்.

Q3 வாசு தான் பயிற்சி கொடுத்த விளையாட்டு **வீராங்கனை**களின் திறமையை ____________________ பல்வேறு வினாடிச் சோதனைகளைச் செய்தார்.

Q4 இனியாள் தான் சேமித்த பணம் அனைத்தையும் ____________________ அறியாமல் செலவழித்ததால் மாத இறுதியில் அன்றாட உணவிற்கே **திண்டாடினாள்.**

Q5 உள்ளூர் கடனைத் தீர்ப்பதற்காகச் சங்கர் வெளிநாட்டிற்குப் பயணித்து ____________________ வேலை செய்வதில் அவன் தாயாருக்கு **ஈடுபாடில்லை**.

| | |
|---|---|
| (A) ஆற அமர | (B) ஏனோ தானோவென |
| (C) எடுத்தெறிந்து | (D) ஒரு கை பார்க்க |
| (E) திக்கு முக்காடி | (F) வரவு செலவு |
| (G) ஆழம் பார்க்க | (H) அடக்க வொடுக்கமாக |
| (I) தான தர்மம் | (J) இடுப்பொடிந்து |

**A2 முன்னுணர்வு கருத்தறிதல் (10 மதிப்பெண்கள்)**

**பின்வரும் பகுதியில் கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கேற்ற அமைப்புச்சொற்கள், பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கேற்ற மிகப் பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து, அதன் எண்ணை மட்டும் விடைத்தாளில் எழுதவும்.**

'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை' என்பார்கள். ஆனால், இன்றைய காலக்கட்டத்தில் "ஒற்றுமை என்பதற்குப் பொருள் என்ன?" என்று கேட்கிறார்கள். இதனால், குடும்பத்திலும் **அலுவல்களிலும்**, ஏன் நண்பர்களிடத்திலும்கூட பல Q6. ______________________ ஏற்படுகின்றன. எல்லோரிடத்திலும் ஒற்றுமையை எதிர்பார்ப்பது மிகவும் கடினமான செயல். ஏனெனில், இன்றையக் காலக்கட்டத்தில் தன்னை யாராவது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர நினைத்தால், கொண்டுவர Q7. ______________________ தனிமை ஆக்கப்படுகிறார்கள். இதற்காகவே பெரிய நிறுவனங்கள் ஊழியர்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தவும் பலப்படுத்தவும் பல முகாம்களை நடத்தி அதன்வழி பயிற்சி அளிக்கின்றன. இம்முறை நிறுவனங்களுக்குப் பொருந்தும். குடும்பத்திற்கும் நண்பர்களுக்கும் பொருந்துமா? ஒற்றுமையை வளர்த்துக்கொள்ள வேண்டுமென்றால் நாம் பிறரிடம் ஒரு வெளிப்படையான மனிதனாக இருக்க வேண்டும்.

எப்பொழுதும் நம்மைப் பற்றி நினைக்காமல் அடுத்தவர்களின் இடத்தில் நம்மை நிறுத்திச் சிந்திக்க வேண்டும். ஒருவரைப் பற்றி Q8. ______________________ சொல்லும்போது மூன்று முறையாவது யோசிக்க வேண்டும். பிறரின் முன் யாரையும் குறை சொல்லக் கூடாது. அவ்வாறு குறை கூறினாலும் அவர்களை Q9. ______________________ அழைத்துக் கூற வேண்டும். ஒவ்வொருவரிடமும் சில நல்ல பழக்கங்களும் குணங்களும் இருக்கும். அவற்றை அறிந்து அவர்களைப் பாராட்ட வேண்டும். இம்முறைகளில் ஒருவர் சிரித்த முகத்துடனும் தன்னம்பிக்கையுடனும் இருந்தால் எவ்வளவு பெரிய பிரச்சனைகள் வந்தாலும் ஒற்றுமை எனும் ஆயுதத்தால் Q10. ______________________. எனவே, மாணவர்களாகிய நீங்கள் ஒற்றுமையை வளர்த்து, ஒன்றிணைந்து செயல்படுங்கள்!

| | |
|---|---|
| (A) குறை | (B) நினைக்காமல் |
| (C) தனியாக | (D) புகார் |
| (E) வெல்லலாம் | (F) கருத்து |
| (G) சண்டைகள் | (H) பிரச்சனைகள் |
| (I) பொதுவாக | (J) நினைப்பவர்கள் |

WORDSMITH BEYOND LEARNING

## ‘ஆ’ பிரிவு

**B3 தெரிவுவிடைக் கருத்தறிதல் (10 மதிப்பெண்கள்)**

**பின்வரும் பனுவல்களைக் கருத்தூன்றிப் படித்து அவற்றிற்குரிய வினாக்களுக்கு விடையளிக்கவும். வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் நான்கு தெரிவுகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப்பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எழுத்தை எழுதுக.**

**பனுவல் 1**

நன்னெறிக் கதைகள் 30

**வாழ்க்கை பயணம்**

அராபிய அரசன் ஒருவன் தனது ஆட்களுடன் கப்பலில் **பிரயாணம்** செய்து கொண்டிருந்தான். அதில் ஒரு **சிப்பாய்க்கு** முதல் கடல் பிரயாணம் என்பதால் பிரயாணம் தொடங்கியதிலிருந்து “**அய்யோ, கடல் பேய் நம்மைப் பிடித்துக் கொள்ளப்போகிறது**” என்று கதறினான். யாராலும் இவனைச் சாமாதானம் செய்ய முடியவில்லை. அரசர் கட்டளையிட அவனைக் கடலில் தூக்கி வீசினார்கள். அவன் நீந்தத் தெரியாமல் **திக்கு முக்காடிய** பின்பு அவனது தலை முடியைப் பற்றிப் கப்பலுக்குள் இழுத்தனர். அவன் கப்பலுக்குக் கொண்டுவரப்பட்டவுடன், ஒரு மூலையில் அமைதியாக உட்கார்ந்தான்.

நன்னெறிக் கதைகள் 31

வாழ்க்கையில் மேற்கொள்ளும் ஒவ்வொரு பயணமும் நமக்கு முதல் அனுபவமாகதான் இருக்கும். அதனால், வரப்போவதைப் பற்றி நினைத்துப் பயப்படுவதால் பயனில்லை. எதையும் தைரியமாக எதிர் கொண்டால் நாம் வெற்றி பெற முடியும். ஆகவே, பயணத்தில் எப்போதும் எதற்காகவும் பயப்படவே கூடாது. ஏனெனில், பயம் நம்மை வளர விடாது. பயணம் நமக்கு நிறைய பாடங்களைக் கற்றுத் தரும் நல்ல ஆசான். அதனைக் கற்றுக்கொள்வதற்கு மனத்தில் தெளிவும் தைரியமும் அவசியம்.

- முற்றும் -

<u>வினாக்கள்</u>

Q11 “அய்யோ, கடல் பேய் நம்மை பிடித்துக் கொள்ளப்போகிறது” எனும் வாக்கியத்தில் ‘கடல் பேய்’ எனும் சொல் எதனைக் குறிக்கிறது?

(A) கடலின் சீற்றத்தை

(B) கடலில் முழ்கி செத்துவிடுவதை

(C) கற்பனையால் எழும் பயத்தை

(D) கடலில் உலாவும் பேயை ( )

Q12 பயணம் வாழ்க்கையில் ஒரு நல்ல ஆசானாக திகழ்கிறது என கட்டுரையாசிரியர் ஏன் கருதுகின்றார்?

(A) மனத்தில் தெளிவையும் தைரியத்தையும் தருவதால்

(B) வெற்றி தோல்வியைக் கற்றுத் தருவதால்

(C) வாழ்வில் அனைத்தும் முதல் அனுபவம் என்பதால்

(D) வாழ்க்கையில் பல விதமான பாடத்தைப் போதிப்பதால் ( )

**பனுவல் 2**

**மாற்றம் ஒன்றே மாறாதது**

அனிதா: அத்தை எனக்கு ஒரு கேள்வி உள்ளது. கால மாற்றம் எவ்வாறு நடைபெறுகின்றது?

அத்தை: கால மாற்றம், காலம் செல்லச் செல்ல வாழ்க்கை படிப்படியே மாறி வருகிறது. வாழ்க்கையை ஒட்டிய கருத்துகளும் மெல்ல மெல்ல மாறி வருகின்றன. உண்பது, உடுத்துவது போன்ற புறவாழ்க்கைப் பகுதிகளில் மட்டுமல்லாமல் மனிதன் எண்ணும் எண்ணங்கள், உணரும் உணர்வுகள் ஆகிய வாழ்க்கைப் பகுதிகளிலும் மாறுதல்கள் நிகழ்ந்து வருகின்றன. அத்தகைய மாறுதல்களை உணர்ந்து அவற்றிற்கேற்ப வாழ்க்கையை நடத்தத் தெரிந்தவர்கள் வாழ வல்லவர்கள்.

அனிதா: இதற்கு வாழ்க்கை எடுத்துக்காட்டுகள் ஏதேனும் உள்ளதா?

அத்தை: இதோ கூறுகிறேன். தாமரைக் குளத்தையே நம்பி வாழ்ந்த அன்னப்பறவையின் இனம் **குலைந்து** போனது. ஆனால், எங்கும் வாழலாம், எப்படியும் வாழலாம் என்று எண்ணி வாழ்க்கையை நடத்தும் காக்கையின் இனம் **விருத்தி**யடைகிறது. ஆகவே, சூழ்நிலைக்கேற்ப மாறுதல் செய்துகொள்ளும் திறமையைப் பெற்றிருப்பது வாழ்க்கையின் அடிப்படை விதிகளில் ஒன்றாகும். மக்கள் வாழ்க்கையின் தேவைக்கேற்ப மாறுதல்கள் செய்துகொள்வதில் வல்லவர்களாக உள்ளனர். 19-ஆம் நூற்றாண்டுகளுக்கு முன்னிருந்த தமிழர்கள் உடுத்திய உடை வேறு, இன்றைய தமிழர்கள் உடுத்துகின்ற உடை வேறு. அவர்கள் தம்மை அலங்கரித்துக்கொண்ட முறைக்கும், இன்று நாம் **ஒப்பனைச்** செய்துகொள்ளும் முறைக்கும் **அதீத** வேறுபாடுகள் உள்ளன. அவை எல்லாம் **புறத்தே நிகழ்ந்த மாறுதல்கள்**. மனிதன் மனம் உடையவனாக இருப்பதால் இன்ப துன்பங்களை உணர்ந்து அகத்தே

மாறுதல்களை ஏற்று வாழ்கிறான். ஆகவே, மனிதன் காலத்திற்கேற்ப மாறுதல்களைச் செய்ய கடமைப்பட்டுள்ளான்.

அனிதா: அடடா, இவ்வளவு தகவல்கள் உள்ளதா?

அத்தை: ஆமாம் அனிதா. இவையெல்லாம் வாழ்க்கை பாடம் தான். நீயும் பெரியவள் ஆனதும் உன் வாழ்க்கை மாற்றத்தைக் காண்பாய்.

**<u>வினாக்கள்</u>**

Q13 மனிதனின் புறவாழ்க்கையில் தோன்றும் மாறுதல்களை எவ்வாறு கண்டறியலாம்?

(A) மனிதனின் உணவு, உடை மாற்றங்களின் மூலம்

(B) மனிதனின் பழக்க வழக்கங்கள் மாற்றங்களினால்

(C) மனிதனின் உணர்வுகள் மூலம்

(D) மனிதனின் சுயமான கருத்துகளின் மூலம் (   )

WORDSMITH
BEYOND LEARNING
SKILLS = GRADES + ACHIEVE BIG

Q14 அக்காலத் தமிழருக்கும் இக்காலத் தமிழருக்கும் இடையே எவற்றில் பெரிய மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன?

(A) தமிழர்களின் சுற்றுப்புறச் சூழல்களில்

(B) அவர்களது காலத்தைப் புரிந்துகொள்ளும் திறனில்

(C) தமிழர்களின் உண்ணும் முறைகளில்

(D) அவர்கள் உடை உடுத்தும் முறைகளில் (   )

Q15 'புறத்தே நிகழ்ந்த மாறுதல்கள்' எனும் தொடர் உணர்த்தும் கருத்து யாது?

(A) உடலுக்குப் பயன்படுத்தும் பொருட்களின் மாறுதல்கள்

(B) வெளித்தோற்றத்தைப் பார்க்கும் பார்வையில் உருவான மாற்றங்கள்

(C) வெளித்தோற்றத்தில் உருவான மாற்றங்கள்

(D) எண்ணும் எண்ணங்களில் ஏற்பட்ட மாற்றங்கள் (   )

**B4 பிழை திருத்தம் (10 மதிப்பெண்கள்)**

**கீழ்க்காணும் பகுதியின் இடப்பக்கத்தில் ஐந்து வினாக்களின் எண்கள் இடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் எதிரிலுள்ள வரியில் ஒரு சொல் பிழையாக உள்ளது. அந்தப் பிழையான சொற்களைத் திருத்தி அச்சொற்களின் சரியான வடிவத்தை எழுதவும்.**

| | |
|---|---|
| | மனிதநேயம் என்றவுடன் நம் நினைவிற்கு வருவது நம்மில் பலரும் இதுவரை நேரில் |
| | கூட கண்டிராத அன்னை தெரசா, நெல்சன் மண்டேலா, ஹெலன் கெல்லர் போன்ற |
| | சான்றோர்கள் தான். இவர்கள் "தனக்குப் போகத் தான் தானமும் தருமமும்" என்ற |
| Q16 | நிலைமையைத் தாண்டி தன் வாழ்வை முழுவதுமான சமூகப் பணிகளுக்காக |
| Q17 | அர்பணித்துக் கொண்டவர்கள். நம் கண் முன்னே நடக்கும் அன்றாட நிகழ்வுகளை நம் |
| | உதவி தேவைப்படுவோருக்கு நம்மால் இயன்ற அளவு உதவ வேண்டும். சக |
| | மனிதர்களிடம் அன்பு காட்டுவதை மனித நேயம் எனக் கூறலாம். நாம் பிறருக்கு |
| Q18 | துன்பம் அழிக்காமல் இருத்தல், இயலாதவர்களின் துன்பத்தைப் போக்குதல், இளகிய |
| Q19 | இதயமும் இரக்க சுபாவமும், உறுதியான செயல்பாடுகளும் கொண்டிருத்தல் ஆகியது |
| | மனித நேய செயல்கள். மனுநீதி சோழன் ஒரு பசுவின் கன்றிற்காக தன் மகனையே |
| Q20 | தண்டித்தவர். சிபி சக்கரவர்த்தி புறாவிற்காகத் தங்கள் உடலையே தானம் செய்தவர். |
| | பாரி மன்னன் முல்லைக்காக தேர் கொடுத்தவர் என வரலாற்றுக் கூறாக தமிழர்களின் |
| | மனித நேயம் எடுத்துரைக்கப்படும். எனவே, மனிதநேயம் உயர்வாக உள்ள மனிதர்கள் |
| | இதயத்தால் யோசித்து புத்தியினால் அதை உணர செய்வார்கள். மனித நேயத்திற்கு |
| | இணையான பொருளோ செல்வமோ இந்த உலகத்தில் வேறு எதுவும் கிடையாது. |

WORDSMITH
BEYOND LEARNING

Q16 ______________________

Q17 ______________________

Q18 ______________________

Q19 ______________________

Q20 ______________________

## ‘இ’ பிரிவு

**C5 சுயவிடைக் கருத்தறிதல் (30 மதிப்பெண்கள்)**

**பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியில் காணும் வினாக்களுக்கு உம் சொந்த நடையில் விடை எழுதவும்.**

ஒவ்வொரு குடும்பத்திலும் தலைமுறை இடைவெளி என்பது ஒரு சிக்கலாகவே இருக்கிறது. ஒவ்வொரு குடும்பங்களிலும் வளர்ந்த பெரியவர்களும் வளர்ந்து வரும் இளையோர்களும் இருப்பர். இவ்விரு **தரப்பினருக்கும்** இடையில் மனநிலைகள் மற்றும் **அணுகுமுறை**கள் தொடர்பாக ஏற்படும் கருத்து வேறுபாடுகள்தான் தலைமுறை இடைவெளி எனப்படுகிறது.

உண்மையில் தலைமுறை இடைவெளி தொடர்பான பிரச்சனைகளுக்குப் பெரியவர்கள், குழந்தைகள் ஆகிய இருதரப்பினருமே சம அளவில் காரணமாக அமைகின்றனர். பெரியவர்கள் அவர்களுக்குப் பழகிப்போன காலம் கடந்த மனநிலைகளையும் அணுகுமுறைகளையும் மாற்றிக் கொள்ள மறுக்கின்றனர். அதுபோல், இளையோர்களும் தங்களின் தேவைகளை அறிந்து பெரியோர்களின் கருத்துக்கு இடமளிக்காமல் தான் எடுத்த முடிவில் பின்வாங்காமல் முன்னோக்கி செல்லுகின்றனர். எனவே, அவர்களுக்கு இளையோரின் மாறுபட்ட **மனநிலை**களும் அணுகுமுறைகளும் பிரச்சனைக்குரியனவாகவே தோன்றுகின்றன.

இளைஞர்கள் எப்படி வளர்கின்றனர் என்பது பெற்றோர்கள் அவர்களை எப்படி வளர்க்கின்றனர் என்பதைப் பொருத்ததுதான் அமையும். இருப்பினும், இன்றைய இளைஞர்கள் தங்கள் பெற்றோருடன் பழகும் நேரத்தைவிட வெளி உலகத்தினருடன் **<u>உறவாடும்</u>** நேரமே அதிகமாகும். வீட்டிற்கு வரும் உறவினர்களிடம் அமர்ந்து பேசுவதில்லை. மேலும், அனைவரும் ஒன்றாக இணைந்து உணவு உண்ணும் நேரத்திலும் ஒருவர்கொருவர் முகம் கொடுத்து பேசுவது கிடையாது. ஒரு வேளை பேசினாலும், அவர்களுக்கும் பிறர்களிடம் பழகும்போது இருக்கும் நெருக்கம் குடும்பத்தாரோடு வருவதில்லை. அதோடு, இன்றையக் காலத்தில் தகவல் தொடர்பு சாதனங்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றமும் வளர்ச்சியும் இந்நிலைக்கு **வித்திடுகிறது**. அனுதினமும் இளைஞர்கள் கைகளில் விவேக கைப்பேசி தவழ்வதால் ஓய்வு நேரம் முழுவதும் அதிலேயே கழிகிறது. சமூக வலைத்தளங்களை பயன்படுத்தும் நேரங்களில் நண்பர்களையும் இணைத்துக் கொண்டு குடும்ப உறவைப் புறக்கணிக்கின்றனர்.

ஆதலால், பெரியோர்கள் இதனைக் கண்டு சமுதாயமே சீரழிந்து விட்டதாக எண்ணி ஆத்திரமடைகின்றனர். இது சூழ்நிலை மாற்றத்தால் இன்றைய இளைஞர்களிடம் ஏற்பட்டுள்ள மாற்றம்தான் என்பதைப் புரிந்துக் கொள்ள தவறுகின்றனர். சமுதாய மாற்றத்தால் மனிதர்களே

வாழ முடியாத நிலை உருவானால்தான் கேடு. மாறாக, மனித வாழ்க்கைக்கு உதவக்கூடிய சமுதாய மாற்றங்கள் யாவும் கேடல்ல. அவை மனநிலைகளிலும் அணுகுமுறைகளிலும் ஏற்படுகின்ற மாற்றங்கள் மட்டுமே. அக்காலத்தில் நியாயங்கள் வேறு இக்காலத்தில் வேறு என்பதைப் புரிந்துகொண்டாலே **தலைமுறை** இடைவெளி பிரச்சனையாக இருக்காது.

இத்தகைய பிரச்சனைகளைத் தவிர்க்கப், பெற்றோர்கள் தங்களுடைய குடும்ப **பொருளாதார நிலை**யைப் பற்றி அவ்வப்போது குழந்தைகளுக்கு எடுத்துரைக்க வேண்டும். தங்களது பண்பாடு மற்றும் சம்பிரதாயங்களின் பெருமைகளை விளக்க வேண்டும். எதையும் புரியும் வகையில் பொறுமையாகவும் நிதானமாகவும் கூறினால் குழந்தைகள் விரைவில் புரிந்துகொள்வர். ஒருமுறை கூறியதும் விரைவில் புரிந்துகொள்ள வேண்டுமென ஆத்திரப்படக் கூடாது. அவர்களின் போக்கிற்கேற்ப நாமும் மாறிக்கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லாமல் எடுத்ததற்கெல்லாம் தவறு கண்டுபிடிப்பதும் கண்டித்துக் **கெடுபிடி** செய்வதுமாக இருந்தால், குழந்தைகள் ஆரோக்கியமான மனநிலையில் வளர மாட்டார்கள். இனிமேல் தங்களைக் கட்டுப்படுத்த யாருமில்லை என்ற நிலை ஏற்பட்டதும் அவர்கள் விருப்பம்போல் வாழ ஆரம்பித்து விடுவர். இது சில நேரங்களில் தவறான **போக்கிற்கு** வழிவகுக்கும்.

WORDSMITH
BEYOND LEARNING

**வினாக்கள்**

Q21 இன்றைய குடும்பங்களில் உள்ள பிரச்சனைகளாகக் கட்டுரையாசிரியர் எவற்றைக் குறிப்பிடுகின்றார்? (4 மதிப்பெண்கள்)

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

Q22 தலைமுறை இடைவெளி எதனால் உருவாகின்றது என நீ நினைக்கிறாய்? (5 மதிப்பெண்கள்)

Q23 மேற்கண்ட பனுவலைப் படித்துவிட்டு அப்பாவும் மகனும் கருத்துரைக்கின்றனர்.



மகன்: அப்பா, இன்றைய இளைஞர்கள் பொழுதை குடும்ப உறவுகளுடன் அதிகம் போக்குவதே இல்லை.



அப்பா: ஆமாம், இதற்கு தொழில்நுட்ப வளர்ச்சியும் ஒரு காரணமாக அமைகின்றது.

(அ) மகனின் கூற்றுக்கு ஆதரவாக 3-ஆம் பத்தியிலிருந்து தக்க சான்றுகளைக் கண்டறிந்து எழுதுக. (4 மதிப்பெண்கள்)

(ஆ) அப்பாவின் கருத்துக்கான காரணங்களை 3-ஆம் பத்தியை அடிப்படையாக கொண்டு எழுதவும் (2 மதிப்பெண்கள்)

Q24 பெரியோர்கள் எதனைப் புரிந்து நடந்துக் கொள்ள வேண்டும் என்பதை விளக்கி எழுதுக (4 மதிப்பெண்கள்)

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

Q25 தலைமுறை இடைவெளி பிரச்சனைகளை நீக்குவதற்கான வழிமுறைகளை விளக்குக. (6 மதிப்பெண்கள்)

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

WORDSMITH
BEYOND LEARNING
EQ SKILLS = JUMP GRADES + achieve BIG

Q26 பத்தி 1-இல் 'பிளவு' என்னும் பொருளை உணர்த்தும் சொல்லைக் கண்டறிந்து எழுதவும். (1 மதிப்பெண்)

_______________________________

Q27 பத்தி 4-இல் சுற்றி நிகழும் நிகழ்வை எந்தச் சொல் உணர்த்துகிறது என்பதைக் கண்டறிந்து எழுதவும். (1 மதிப்பெண்)

_______________________________

பின்வரும் சொற்கள் பனுவலில் இடம்பெற்றுள்ளன. அவை உணர்த்தும் பொருளை எழுதவும்.

(3 மதிப்பெண்கள்)

Q28 உறவாடும் - ____________________

Q29 ஏதுவாக - ____________________

Q30 போக்கிற்கு - ____________________

# SEC 4-O-LEVEL EXAM REVISION WORKSHEETS (PAPER 2) - LEVEL 2

## உயர்நிலை 4 சாதாரண நிலை தேர்வுப் பயிற்சித்தாள் (தாள் 2) - நிலை 2

### அருஞ்சொற்பொருள்

| தேர்வுத்தாள் 1 | | | |
|---|---|---|---|
| எண் | அருஞ்சொல் | பொருள் | English Meaning |
| 1 | வீராங்கனை | பெண் விளையாட்டாளர் | Female player |
| 2 | திண்டாடுதல் (திண்டாடினாள்) | போராடுதல் | Struggle |
| 3 | ஈடுப்பாடில்லை | விருப்பமில்லை | No interest |
| 4 | அலுவல் (அலுவல்களிலும்) | வேலைகளிலும் | Jobs |
| 5 | பிரயாணம் | பயணம் | Travel |
| 6 | சிப்பாய் | போர் வீரன் | Soldier |
| 7 | திக்கு முக்காடுதல் (திக்கு முக்காடிய) | தவித்தல் | Choking |
| 8 | குலைதல் (குலைந்து) | அழிந்து | Extinction |
| 9 | விருத்தி | அதிகமாதல் | Expanding |
| 10 | ஒப்பனை | அலங்காரம் | Make up |
| 11 | அதீத | அளவுக்கு அதிகமான | Extreme |
| 12 | தரப்பினர் (தரப்பினருக்கும்) | குழு | Party |
| 13 | அணுகுமுறை | வழிமுறை | Approach |
| 14 | மனநிலை | எண்ணம் | Thought |
| 15 | வித்திடுதல் (வித்திடுகிறது) | ஏற்படுத்துதல் | Lead to |
| 16 | தலைமுறை | பரம்பரை | Generation |
| 17 | பொருளாதார நிலை | - | Economic situation |
| 18 | கெடுபிடி | கண்டிப்பு | Strictness |

WORDSMITH BEYOND LEARNING

**SEC 4 - O-LEVEL EXAM REVISION WORKSHEETS (PAPER 2) - LEVEL 2**
**உயர்நிலை - 4 சாதாரண நிலை தேர்வுப் பயிற்சித்தாள் (தாள் 2) - நிலை 2**

## விடைகள்

### தேர்வுத்தாள் 1

**A1 மரபுத்தொடர்களும் இணைமொழிகளும்**

| | | |
|---|---|---|
| Q1 | ஏனோ தானோவென | (B) |
| Q2 | அடக்க வொடுக்கமாக | (H) |
| Q3 | ஆழம் பார்க்க | (G) |
| Q4 | வரவு செலவு | (F) |
| Q5 | இடுப்பொடிந்து | (J) |

**A2 முன்னுணர்வு கருத்தறிதல்**

| | | |
|---|---|---|
| Q6 | பிரச்சனைகள் | (H) |
| Q7 | நினைப்பவர்கள் | (J) |
| Q8 | குறை | (A) |
| Q9 | தனியாக | (C) |
| Q10 | வெல்லலாம் | (E) |

**B3 தெரிவுவிடைக் கருத்தறிதல்**

Q11 A
Q12 D
Q13 A
Q14 D
Q15 C

**B4 பிழை திருத்தம்**

Q16 முழுவதுமாக
Q17 நிகழ்வுகளில்
Q18 அளிக்காமல்
Q19 ஆகியவை
Q20 தன்

**C5 சுயவிடைக் கருத்தறிதல்**

Q21 ஒவ்வொரு குடும்பங்களிலும் பெரியோர் இளையோரிடையே உள்ள இடைவெளியைச் பிரச்சனையாகக் கருதுகிறார் கட்டுரையாசிரியர். அவர்களின் எண்ணங்கள், அணுகுமுறைகள், கருத்து வேறுபாடுகள் போன்றவையே இந்த இடைவெளிக்குக் காரணமாக இருக்கின்றனர்.